# "திருவிருந்து (அ) இராப்போஜனம்"

**முன்னுரை :**

வேதாகமப் புத்தகமானது மனிதனுடைய காரண காரியங்களுக்கு அப்பாற்பட்டு புரிந்துகொள்ளக்கூடிய உண்மையான கூற்றுக்கள் தன்னகத்தே உடையதாயிருக்கிறது.

அதைப் போலவே உண்மையான காரண காரியங்களை உடைய உண்மையான கூற்றுக்கள் காரண காரியங்களை உடையதாயிருக்கிறது. அந்த ஒவ்வொன்றும் மனித காரண காரியங்களை சார்ந்து முரண்பட்டதாயிருக்கிறது. ஆவிக்குரிய காரண காரியங்களில் ஆண்டவருடைய மனதை, சிந்தையை பரப்புபவர்களாய், விசுவாசத்தின் மூலம் அவருடைய வார்த்தையில் நம்பிக்கை உடையவர்களாய் நாங்கள் கட்டாயமாய் இருக்கிறோம். மனித காரணங்களுக்கு அப்பாற்பட்டு விசுவாசமானது உண்மையை கிரகித்துக் கொள்கிறது. அதைப் போலவே உலக வெளிப்பாட்டை (திறந்து காட்டுதலை) விசுவாசமான ஏற்றுக் கொள்கிறது. ஒரு ஆண்டவருக்குள் மூன்று ஆட்கள் இருக்கிறார்கள். கடவுள் மூன்று ஆள் தத்துவமுடையவராய் இருக்கிறார். திரித்துவத்தை, திரித்துவ தேவனை நாங்கள் விசுவாசிக்கிறோம். இது உண்மையான கூற்றாகவும்,, பரம இரகசியமாயும் இது இருக்கிறது, என்பதை விசுவாசத்தின் மூலம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மனிதனாகவும், கடவுளாகவும், இரண்டுமாயிருக்கிறார். அதாவது அவர் அந்த இரண்டு விதமான இயல்பும் உடையவராயிருக்கிறார். அந்த ஒரு மனிதன் மனிதனுடைய இயல்பை தன்னகத்தே உடையவராகவும், தெய்வீக தன்மையை உடைய இயல்பையும் தன்னகத்தே உடையவராக இருக்க முடியும் என்பதை நம்முடைய விவேக காரணங்களால் உண்மையை கிரகித்துக் கொள்ளமுடியாது. இருந்த போதிலும் இது எப்படி இயேசு என்ற தனிப்பட்ட மனுசனுக்குள் சரியாக இருக்கமுடியும்? விவேக காரணம் சொல்கிறது "முடியாது" அதே சமயம் விசுவாசம் சொல்கின்றது. "நான் விசுவாசிக்கிறேன்" என்று.

தேவனுடைய வார்த்தை என்ன உபதேசிக்கின்றதோ அதை நாங்கள் விசுவாசத்தின் மூலம் ஏற்றுக் கொள்கிறோம். பரம இரகசியமும், உண்மையான கூற்றும் திருவிருந்து ஆராதனையில் உடையவர்களாய் நாங்கள் இருக்கிறோம். தேவனுடைய வார்த்தையாகிய இந்த உபதேசத்தை நாங்கள் கடமையாய் விசுவாசிக்கிறோம். வாலிபன் சாமுவேலைப் போன்ற மனநிலையில் எங்கள் மனோ நிலை கண்டிப்பாக இருக்கிறது. "கர்த்தாவே

சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்றான்". விசுவாச இருதயத்தோடு கேட்பதற்கும், ஏற்றுக் கொள்வதற்கும் விருப்பமுடையவர்களாய் இருப்போம்.

<u>**கிறிஸ்துவினுடைய வார்த்தைகள் :**</u>

ஆண்டவருடைய இராப்போஜன திருவிருந்தைப் பற்றின உபதேசம் கீழ்கண்ட குறிப்புக்களில் காணப்படுகிறது. மத் 26:26–29, மாற்கு 14:22–25, லூக்கா 22:19–22, 1 கொரி 11:23–30, 1 கொரி 10:14–22. மேற்கண்ட இந்த வேதக் குறிப்புகளில் தேவன் சொல்கின்றதை தெளிவாக கேட்கிறோம். அப்பத்தைக் குறித்துச் சொல்லும்போது "இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றும், திராட்சை இரசத்தைக் குறித்துச் சொல்லும்போது இது என்னுடைய இரத்தமாயிருக்கிறது என்றும் சொல்கிறார். இன்னும் அவர் தம்முடைய சீஷர்களுக்கு சொல்கிறார் இதை அப்பத்தை "புசியுங்கள்" என்றும், இந்தப் பாத்திரத்தில் "பானம் பண்ணுங்கள்" (குடியுங்கள்) என்றும் சொல்கிறார். திருவிருந்தில் நான்கு மூலப் பொருட்கள் இருப்பதாக அவர் குறிப்பிடுகிறார். அப்பமும், திராட்சை இரசமும், அவருடைய திருச்சரீரமும், திரு இரத்தமும், பூமிக்குரிய மூலப்பொருட்கள் இரண்டு, பரலோக பொருட்கள் இருக்கின்றன என்றும் எப்பொழுதும் திருவிருந்தில் பங்கெடுத்துக் கொள்ளும்போது நாங்கள் சொல்கிறோம். அந்த திருவிருந்தில் எப்போது நம்முடைய கர்த்தர் சொல்கிறார். இது உங்களுக்காக கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது. இது பாவமன்னிப்புக்கென்று உங்களுக்காக சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்று கர்த்தர் நமக்குச் சொல்கிறார். இந்த பரிசுத்த செய்கையினால் கடவுள் விசுவாசிகளுக்கு பாவ மன்னிப்பின் நிச்சயத்தை கொடுக்கிறார், என்று நாங்கள் அறிந்திருக்கிறோம். சரியாக அதைப் போலவே அவர் சுவிசேஷத்தினால் இந்த உலகத்தில் இதைச் செய்திருக்கிறார். எப்பொழுது நாம் இதைச் செய்கிறோமோ, இதில் பங்கு கொள்கிறோமோ அவரை நினைவு கூர்பவர்களாகவும் அவருடைய மரணத்தை நினைவு கூர்பவர்களாகவும், இருந்து பாவ மன்னிப்பாகிய ஆறுதலை உடையவர்களாயிருக்கிறோம். நாம் அடிக்கடி அதைப்போலவே புசிக்கிறவர்களாக, பானம் பண்ணுகிறவர்களாக இருக்கும்போது அவருடைய சமாதானப்படுத்தும் இந்தப் பிரயாசித்த வேளையில் நாம் நம்முடைய விசுவாசத்தை அறிவிக்கிறவர்களாயிருப்போம்.

வேதாகமப் புத்தகம் வேதாகம புத்தகத்தை விளக்குகிறது (அர்த்தம் சொல்கிறது). வேதாகமம் தன்னைக் குறித்து தானே விவரித்து காண்பிக்கின்றது என்பதை நாங்கள் உறுதியாக விசுவாசிக்கிறோம். கடினமாய் சொல்லப்பட்டிருக்கிற ஒரு சிலவைகளை சாதாரணமாக அதிக கவனம் எடுத்துக்கொண்டு படித்து விசுவாசத்தின் மூலம் புரிந்துக் கொள்ள வேண்டும். அவ்விடத்தில் வார்த்தையில் பாலும் இருக்கிறது, மாமிசமும் அவ்விடத்தில் இருக்கிறது. ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக "நீங்கள் கண்டிப்பாக முந்தி அறிய வேண்டியது. "தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை, தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்". II பேதுரு 1:21.

வேதாகமத்திலுள்ள எந்த தீர்க்க தரிசனமும் சுய தோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது" II பேது 1:20.

திருவிருந்தில் உடன் இருக்கிற வார்த்தைகளான இது எனக்காக கொடுக்கப்பட்டது, என்ற மன உணர்வுடன் பிறகு நாம் இந்த திருவிருந்தை எடுத்துக் கொள்கிறோம். திருவிருந்தைப் பற்றின மற்ற வாக்யப் பகுதிகளினாலும், குறுக்கு குறிப்புக்களினாலும், அவர்களைப் புரிந்துக்கொண்டு, அவர்களுடன் நாங்கள் இணங்குகிறோம்.

நெருக்கமான அமைப்போ அல்லது ஒரு பாராவோ அல்லது ஒரு பகுதியோ வார்த்தைகளை சூசகமாக விவரிக்கிறதாயிருந்த போதிலும் நாங்கள் இயற்கையாகவே வார்த்தைகளுக்கு அதனுடைய சொற்களுக்கு நேரான அல்லது சரியான அர்த்தத்தை எடுக்கிறோம்.

இது என்னுடைய சரீரமாயிருக்கிறது. இது என்னுடைய இரத்தமாயிருக்கிறது என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொல்கிறார். இந்த வாக்கியப் பகுதிகளை, இந்த வார்த்தைகளை வேறு எந்த காரணத்திற்காகவும், வேறு ஒரு சூசகமான (மறை பொருளான) கருத்தில் அல்லது அர்த்தத்தில் எடுக்கமுடியாது – அப்படி எடுக்ககூடாது.

இது என்னுடைய சரீரத்திற்குப் பதிலாக, என்னுடைய இரத்தத்திற்குப் பதிலாக இருக்கிறது என்று இயேசு கிறிஸ்து அர்த்தப்படுத்துவதாக சில சீர்திருத்த புராட்டஸ்டெண்ட்ஸ் திருச்சபையினர் நினைக்கின்றனர். ஆனால் அவர்களுடைய அந்த

காரணத்திற்கு எந்த ஒரு சாதாரண ஆதாரமும் அவர்களுடைய அர்த்தத்தை பெலப்படுத்தவில்லை. அந்த அர்த்தமானது அதுச் சரியாக என்னவாயிருக்கிறது என்பதிலிருக்கிறது.

அவர்களுடைய அர்த்தம் இந்த பரம இரகசியத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே அவர்கள் இந்த வழியில் ஒரு சூசகமான (மறைபொருளான) அறிவுடன் இதை விளக்குகின்றனர்.

**அப்பமும் - இரசமும் மாத்திரம் ஓரளவு (கொஞ்சம்) அதிகமாயிருக்கிறது.**

“ஒருவன் தகுதியில்லாத முறையில் அபாத்திரமாய் கர்த்தருடைய அப்பத்தை புசித்து, இந்தப் பாத்திரத்தில் பாணம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும், அவர் திரு இரத்தத்தையும் குறித்து குற்றமுள்ளவனாயிருப்பான். ஒருவன் சூட்சும புத்தியுடன் இதில் பிரவேசிக்ககூடாது” என்றும் 1 கொரி 11:27–28ல் பவுல் சொல்கிறார். சாதாரணமாயிருக்கிற அப்பத்தையும், இரசத்தையும், ஒருவன் சாபப்பிடும்போது தெய்வ நிந்தனை செய்த குற்றவாளியாய் இருக்கமாட்டான். அப்பமும், இரசமும், மாத்திரம் இங்கே சிறிதளவேனும் மிக உயர்ந்ததாயில்லை. அல்லது ஆகவே அப்படியாக பவுல் சொல்லவில்லை. கர்த்தருடைய திரு சரீரமாயிருக்கிறதையும், திரு இரத்தத்தையும் யார் இன்னும் சூட்சும புத்தியுடன் புசிக்கவோ, பானம் பண்ணவோ கூடாது என்று பவுல் சொல்கிறார். “தனக்கு ஆக்கினை தீர்ப்பு வரும்படி போஜன பானம் பண்ணுகிறான்” 1 கொரி 11:29.

ஆகிலும் இது அப்பமும், இரசமுமாய் மாத்திரம் இருக்கிறது. இந்த காரியத்தின் மேல் வாக்குமூலம் அதிக கடினமாயிருக்கிறது.

“இதினிமித்தம் உங்களில் அநேகர் பலவீனமும், வியாதி உள்ளவர்களுமாயிருக்கிறார்கள். அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்”. 1 கொரி 11:30. இந்த நியாயத் தீர்ப்பானது எப்படி தன்னைக் குறித்துக் காட்டுகிறது என்பதைக் குறித்து மேற்கண்ட வசனத்தில் பவுல் கொரிந்திய திருச்சபையினர்களுக்கு விளக்குகிறார்.

அந்த கொரிந்து திருச்சபையில் தனிப்பட்டவர்கள் அவர்களுடைய பாவத்திலிருந்து மனந்திரும்பாமல் திருவிருந்து எடுக்க வந்திருந்து, அவர்கள் எவ்வளவு

தகுதியில்லாதவர்களாய் இருந்து இருக்கிறார்கள். அவர்கள் திருவிருந்தை அலட்சியமாக கருதி நடந்து, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் திருச் சரீரத்தின் மூலமும், திரு இரத்தத்தின் மூலமும், கிடைக்கிற பாவ மன்னிப்பில் நம்பிக்கையில்லாதவர்களாய் இருக்கிறார்கள். இது அவர்கள் மேல் நியாயத் தீர்ப்பை கொண்டு வருகின்றது.

இது இந்த திருவிருந்தில் அப்பத்தில் பங்கு கொள்வதானது கிறிஸ்துவின் சரீரத்தில் நாம் பங்கு கொள்வதாயும், இரசத்தில் பங்கு கொள்ளுதல் கிறிஸ்துவின் இரத்தத்தில் நாம் பங்கு கொள்வதாயுமிருக்கிறது என்று நமக்கு பவுல் 1 கொரி 10:16–17 சொல்லியிருக்கிறார்.

பாவ மன்னிப்பிற்காக அப்பத்திற்குள்ளும், இரசத்திற்குள்ளும், முறையே கிறிஸ்துவின் திருச்சரீரமும், கிறிஸ்துவின் திரு இரத்தமுமாயிருக்கிற பரம இரகசியமான வழியில் நாம் திருவிருந்தில் பங்கு கொள்கிறோம். இது எவ்வளவு தெளிவானதாய், எவ்வளவு தெளிவான தேவையாய் இது இருக்கிறது. பிறகு பரம இரகசியமான வழியில் நாம் திருவிருந்தில் பங்கு கொள்ளும்போது அப்பத்திற்குள்ளும், திராட்சை இரசத்திற்குள்ளும் முறையே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினுடைய திருச்சரீரமும், திரு இரத்தமுமாய் பாவ மன்னிப்பிற்காய் உள்ளது.

<u>**வார்த்தையில் வல்லமை :**</u>

நாம் திருவிருந்தில் பங்குகொள்ளும் வரைக்கும், கிறிஸ்துவினுடைய வார்த்தைகளை கேட்டு விசுவாசிக்கும் வரைக்கும், இது சாதாரண அப்பமாயும், இரசமுமாயும் இருக்கிறது. அப்படியே நாம் அதில் பங்கு கொள்ளும்போது கடவுளின் மூலம் நம்முடைய விசுவாசத்தை திடப்படுத்துவதாகவும், கடவுளின் கிருபையை கிறிஸ்துவில் நாம் பெற்றிருக்கிறோம் என்ற நிச்சயத்தையும் கொடுக்கிற அர்த்தமுள்ளதாய் இது மாறுகின்றது. அப்படியே எப்போது நாம் கடவுளுடைய வார்த்தையை மாத்திரம் கேட்கிறோம். ஆகவே பரிசுத்த ஆவியானவர் நம்முடைய இருதயத்தின் மேல் கிரியைச் செய்கிறார். அவ்வண்ணமாக கூடவே திருவிருந்தில் அப்படியே தேவனுடைய வார்த்தைகளை கேட்டு நாம் பங்கு கொள்ளும்போது ஆவியானவர் நம்முடைய இருதயத்தில் கிரியைச் செய்கிறார்.

அநேக புராட்டஸ்டெண்ட்ஸ் திருச்சபையினர் அங்கே அந்த திருவிருந்தில் பாவ மன்னிப்பு இல்லை என்று சொல்லுகின்றனர். கிறிஸ்துவினுடைய அந்தச் சரீரமும்,

இரத்தமும் பிரசன்னமாயிருப்பதில்லை என்றும் அப்படியே அது மாமிசத்தை தின்னும் பழக்கம் என்றும் அவர்கள் சொல்கிறார்கள். இந்த ஜனங்கள் தேவனுடைய வார்த்தையின் வல்லமையை குறைவாக மதிப்பிடுகிறார்கள். தேவனுடைய வார்த்தை எந்த என்ன அர்த்தத்தில் இருக்கிறதோ அதற்குப் பதிலாக வார்த்தை தானே விவரிப்பதற்கு அனுமதியளித்து அவர்கள் காரண காரியங்களை அனுமதித்து அது அவர்களுக்கு உத்தரவிடுகிறது. இங்கே அவர்கள் தேவனுடைய வார்த்தையிலிருந்து எடுக்கிறார்கள்.

அப்பமும், இரசமும் கிறிஸ்துவின் சரீரமாயும், கிறிஸ்துவின் இரத்தமாயும் மாறுகிறது என்று அந்த ரோமன் கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த மதகுருமார்கள் உபதேசிக்கின்றனர். இந்த மாதிரியான சொல்லப்பட்ட விஷயத்திற்கு வேதாகமப் புத்தகத்தில் எங்கும், இப்பொழுதும் எந்தவிதமான ஆதாரங்களாலும் பெலப்படுத்துவதாயில்லை. பகுதியான பாவ மன்னிப்பு மாத்திரம்தான் இங்கே கொடுக்கப்படுகிறது என்றும் கூட அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் எந்த ஒரு குறிப்பிட்ட தகுதியையும் வேதாகமம் உண்டாக்குவதில்லை. திருவிருந்தை நியதிப்படி அனுசரிக்கிறதாயிருந்து அது கிறிஸ்துவினுடைய ஒரு மறு தியாகமாயிருக்கிறது என்று அவர்கள் உபதேசிக்கிறார்கள். அது மிகவும் துரதிஷ்டமானது ஆகும்.

அவர்கள் கூட ஆராதிக்கும்போது அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரம் ஆக மாறுகிறது என்று சொல்கிறார்கள். இது முட்டாள்தனமாயிருக்கிறது. இந்த சபையானது தேவனுடைய வார்த்தையுடன் சுய போதனையை கூட்டுகிறது.

லூத்தரன் திருச்சபையினராகிய நாங்கள் அதே அளவில் தேவ வார்த்தை தெளிவாக என்ன சொல்லுகிறதோ அதனுடன் எதையும் கூட்டாமலும், அதிலிருந்து எதையும் எடுக்காமலும், அதைப் பின்பற்றுகிறவர்களாகவும் இருக்கிறோம். தேவனுடைய வார்த்தையின் வல்லமையை திருவிருந்தில் நாங்கள் பார்க்கிறோம். தேவன் ஒரு பரம இரகசியமான வழியில் திருவிருந்தில் பாவ மன்னிப்பிற்காய் கிறிஸ்துவினுடைய திருச் சரீரத்தையும், திரு இரத்தத்தையும் நாம் பெற்றுக்கொள்ள திருவிருந்து கிருபையின் எத்தனமாயிருக்கிறது.

எங்கள் ஆவல் கடவுளுடைய வார்த்தையை பின்பற்றுவது கூட அது எங்களை இயேசுகிறிஸ்து அப்படியே சரியாகச் செய்ததைப்போல் புளிப்பில்லாத அப்பத்தை இரசத்தை பயன்படுத்துவதற்கு அது எங்களை வழி நடத்துகிறது.

அப்படியே அதே அளவில் அது பொருந்துகிறதாய் பார்த்து திருவிருந்தை நியதிப்படி அடிக்கடி அனுசரிக்க எல்லா திருச்சபையினருக்கும் சுதந்திரமுண்டு. மாதத்திற்கு ஒருமுறை நியதிப்படி திருவிருந்தை அனுசரிப்பது எங்கள் பொதுவான வழக்கமாயிருக்கிறது. நோய்வாய்ப்பட்டிருக்கும்போதும், அவதியுற்றிருக்கும்போதும், அங்கே அவ்விடத்தில் தனியாக திருவிருந்து அனுசரிப்பதுமுண்டு.

கர்த்தர் பெரிய வியாழக்கிழமையன்று யார் அவருக்கு நெருக்கமாயிருந்த சீஷர்களுக்கு மேல் அறையில் திருவிருந்து கொடுத்தார்.

கர்த்தருடைய திருச்சரீரத்தையும் திரு இரத்தத்தையும் யார் கண்டு உணர்கிறார்களோ, யார் அவர்கள் பாவத்தை அறிக்கையிட்டு மனஸ்தாபபடுகிற வர்களுக்கும், பாவங்கள் எல்லாவற்றையும் நீக்கி போட தகுதியுள்ளவராயிருக்கிற அந்த தேவனுடைய மாசற்ற ஆட்டுக்குட்டியின் மேல் யார் நம்பிக்கை உடையவர்களாய் இருக்கிறார்களோ அவர்களுக்கு நாங்களும் கூட திருவிருந்து கொடுத்துவரும் பழக்கத்தை பின்பற்றுகிறோம்.

ஒருவன் எங்கள் ஐக்கியத்துடன் இருப்பானேயானால் எங்களுடன் தேவனுடைய வார்த்தையின் மேல் சம்மதித்து அவனுடைய பாவங்கள் எல்லாவற்றிற்காகவும், மனஸ்தாபப்பட்டு, மனந்திரும்பி, தேவனுடைய திருச்சரீரத்தையும், திரு இரத்தத்தையும் எவன் ஒருவன் கண்டு உணர்கிறானோ அவரை எங்கள் திருவிருந்து ஆராதனையில் பங்கு கொள்ளும்படி அனுமதிக்கிறோம்.

"பிரியமானவர்களே, தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்பு கூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூறக் கடனாளிகளாயிருக்கிறோம்". 1 யோவா 4:11.

## திருவிருந்துடன் கூட கிறிஸ்தவர்களின் கண்ணுக்கு புலப்படக்கூடிய மூன்றுவிதமான தோற்றங்கள்.

| திருச்சபை கருத்து | சீர்த்திருத்தப்பட்டது | லூத்தரன் | ரோமன் கத்தோலிக் |
|---|---|---|---|
| இங்கே இருக்கிறது | அப்பமும், இரசமும் | அப்பமும், இரசமும், சரீரமும், இரத்தமும். | சரீரம், இரத்தம் |
| உபதேசத்தினுடைய | பதிலாக பெயர் | உண்மையான தோற்றம் | ரொட்டியும், இரசமும் ஏசுவின் சரீரமாகவும், இரத்தமாகவும் மாறுதல். |
| திருவிருந்தினால் வரும் நன்மை | வேதாகமத்திலிருந்து அவர்கள் எடுக்கிறார்கள் | வேதத்தைச் சார்ந்து அவர்கள் வேதத்தில் நிற்கிறார்கள் | அவர்கள் வேதத்துடன் தங்கள் சுய போதனையை கூட்டுகிறார்கள். |

※※※※※